1994 மே 5]

டாக்டர் ஜி. ஆர். மாலா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த சேவை நிறுவனத்தில் மகப்பேறு சம்பந்தப் பட்டவைகளைத்தான் பார்க்கிறார்கள். சிறு, சிறு நோய்களுக்கு எல்லாம் அவ்வளவு வசதிகள் இல்லாததால், மீண்டும் அதை அறிவுறுத்தி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடப்பு ஆண்டி லேயே அந்த அரசு மருந்தகத்தைச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கும்படி பணிவுடன் கேட்டுக் கொண்டு அதற்குத் தக்க நடவடிக்கை எடுப்பார்களா என கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் அங்கே ஒரு டிஸ்பென்சரி ஆரம்பித் தாலும் கூட அடிப்படையாக ஓ. பி. என்ற வகையிலே தான் நடத்த முடியும். ஆகவே அந்த வகையிலே தான் அங்கே வைக்க வாய்ப்பு இருக்கிறது. பெரிய வசதிகளை ஏற்படுத்துவதும் முடி யாது. அங்கே 4 கிலோ மீட்டர் தூரத்திலேயே தலைமை மருத்துவமனை இருக்கின்ற காரணத்தால் அவ்வளவு வசதிகள் அங்கே தேவைப்படாது என்று கருதுகிறேன். இருந்தாலும் கூட இப்போது ஆரம்பித்து விட முடியுமா என்று சொல்லிவிட முடி யாது. மீண்டும் துறையைக் கேட்டு ஆய்வு செய்யச் சொல்லி அதற்குப் பின்னாலேதான் நடவடிக்கை எடுக்க முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 524, டாக்டர் க. கோபால், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

524—

இயற்கை எரிவாயுவைக் கொண்டு சோழன் போக்கு வரத்துக் கழகப் பேருந்துகளை இயக்குதல்.

* 21590— டாக்டர் க. கோபால் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழன் போக்குவரத்துக் கழக அனைத்துப் பேருந்து களையும் இயற்கை எரிவாயுவைக் கொண்டு இயக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சோழன் போக்குவரத்துக் கழகத்தில் தற்போது இரண்டு பேருந்துகள் இயற்கை எரிவாயு மூலம் இயக்கப்பட்டு வருகின்றன.

(ஆ) தற்போது சென்னை சுத்திகரிப்பு நிறுவனத்தாரால் எரிவாயு அழுத்தக்கலன் வால்வுகள் பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்தின் அனுமதி பெற்று மேலும் 6 பேருந்துகளை ஆறு மாத காலத்திற்குத் தொடர்ந்து இயக்குவதற்கு முடிவு செய்யப்பட்டு இயக்க முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

டாக்டர் க. கோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது சோழன் போக்குவரத்துக் கழகத்திலிருந்து இரண்டு பேருந்துகள்தான் கம்ப்ரெஸ்டு நேச்சுரல் காஸ் மூலமாக இயக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். என்னுடைய பகுதியில் குறிப்பாக நரிமணம் மற்றும் குத்தாலம் போன்ற இடங்களிலும், அதுபோல திருவாரூர் பகுதியில் அடியக்கமங்கலம், கமலாபுரம், திருக்கண்ணமங்கை, களப்பால் போன்ற பல்வேறு இடங்களில் எல்லாம் அதிகப்படியான இயற்கை எரிவாயு எரிந்துகொண்டிருக்கிற சூழ்நிலை இருக்கிறது. மேலும் இந்த கம்ப்ரெஸ்டு இயற்கை வாயு என்கின்ற அந்த முறையில் இயக்கப்படுகின்ற அந்தப் பேருந்துகள் அதிகமான புகையை விடுவது இல்லை. சத்தமும் கேட்பதில்லை. இதனால் பேருந்து இயக்குவதற்கு எளிதாகவும் அதனுடைய ஓட்டத் திறனும் அதிகமாக இருக்கின்ற காரணத்தால் பல்வேறு இடங்களில் எரிந்து வீணாகின்ற இயற்கை எரிவாயுவைக் கொண்டு மேலும் அதிகப்படியான பேருந்துகள் இயக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா? அதே நேரத்தில் முழுமையாக எல்லாப் பேருந்துகளையும் இயக்குவதற்கும் நடவடிக்கை எடுக்க முடியுமா? அங்கே எரிகின்ற இயற்கை எரிவாயுவையும் வீணாகாமல் தடுத்து நிறுத்துகின்ற வகையில் ஒன்றாக இணைத்து ஒரு யூனிட் அமைத்து எல்லாப் பேருந்துகளையும் அங்கே இயக்குவதற்கு வருகின்ற ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அமைச்சர் அவர்களிடம் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நரிமணத்தில் கிடைக்கின்ற எரிவாயுவை வைத்துக் கொண்டுதான் அந்தப் பேருந்துகள் இயக்க நடவடிக்கை மேற்கொண்டோம். அந்த நடவடிக்கைகளை மேற்கொள்கிறபோது 10 பேருந்துகளை இயக்கிப் பார்த்தோம். அதில் சில குறைபாடுகள் இருக்கின்றன. நேச்சுரல் காஸ் எடுக்கிறபோது தண்ணீரும் அதில் கலந்து வருகிறது. ஆகவே அதையெல்லாம் கருத்தில் கொண்டுதான் அதை ஆய்வு செய்து மீண்டும் நூற்றுக்கணக்கான பேருந்துகளை அதன் மூலம் இயக்கலாமா என்று

1994 மே 5]

திட்டம் தீட்டியிருக்கிறோம். அதிலே சில குறைபாடுகள் இருப்ப பதால் அவைகளைக் களைந்ததற்குப் பிறகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல நூற்றுக்குக் குறையாமல் பேருந்துகள் இயக்கு வதற்கு நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்கிறோம்.

டாக்டர் க கோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அதற்கான நடவடிக்கை எடுப் பதற்கு நன்றி தெரிவித்துக்கொண்டு தற்சமயம் சோழன் போக்குவரத்துக் கழகத்தில் 100 புதிய பஸ்களை இயக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிகிறேன், அந்த 100 பேருந்துகளிலும் இந்த இயற்கை எரிவாயுவைக் கொண்டு ஓட்டுவதற்கு அதற்குத் தகுந்தாற்போல என்ஜின்களை செட் பண்ண நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பேருந்து ஏறத்தாழ இயக்கப்படுகிற தொலை தூரம் 210 கிலோ மீட்டர்தான் இயக்க முடியும். அதிலே 8 சிலிண்டர்களை நாம் பொருத்த வேண்டி இருக்கிறது. அது போன்ற நிலை இருக்கிற காரணத் தால், புதிதாக பேருந்துகளை இயக்குகிறபோது மொஃபசில் ரூட்களில் 300 கிலோ மீட்டர் வரையிலும் நாம் நல்ல பேருந்து களை, புதிய பேருந்துகளை இயக்கிக்கொண்டு இருக்கிறோம். தொலை தூரம் பயணம் செய்கின்றவர்களுக்கு அது ஏதுவாக இருக்கின்ற அளவிலும், பழுது ஏற்படாமல் இருப்பதற்கும் அந்தப் பேருந்துகளை நாம் இயக்கிக் கொண்டு இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிடுகிறபோது, நூற்றுக்கு மேற்பட்ட பேருந்துகளை புதிதாக நாம் கொடுப்ப தோடு மட்டுமல்ல, பல்வேறு போக்குவரத்துக் கழகங்களிலே இருந்து இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் தஞ்சை மண்ணிலே காலடி எடுத்து வைக்கிறபோதே, முதல் நாளிலே, ஒரே நாளிலே 90 பேருந்துகளை நாங்கள் அங்கே வழங்கினோம். அதற்குப் பிறகு 4 கோடி ரூபாய் அதற்காக ஒதுக்கப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களு டைய கருத்துக்களை மனதிலே கொண்டு டவுன் பேருந்துகளை இயக்குவதற்கு நாங்கள் நடவடிக்கை மேற்கொண்டு இருக்கிறோம். அதிலே வால்வுகள் மற்றும் சிலவற்றை மாற்ற வேண்டி இருக்கிறது. ஆக, பக்கத்திலே செல்கின்ற டவுன் பேருந்துகள் ஒரு நாளைக்கு 200 கிலோ மீட்டர் செல்லும் பேருந்துகளில் மட்டும்தான் அதைப் பொருத்தி இயக்க முடியுமே தவிர அதிலே பல்வேறு பிரச்சினை கள் இருக்கின்றன. அந்த சிலிண்டரிலே காஸ் ஃபில் செய் வது—காஸ் நிரப்புவதற்குக் கூட பல்வேறு நிலைகள் இருக்கின்ற

காரணத்தால்தான் இங்கே இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப்போல புதிய பேருந்திலே அதை இயக்குவதைக் காட்டிலும் பழைய பேருந்தில் நாங்கள் அதை இயக்கி சரி செய்து கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கி. பாலசுப்பிரமணியன்,

திரு. கி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது போக்குவரத்துத் துறை அமைச்சர், காஸ்சிலிண்டர் உபயோகித்து ஊர்திகளை எல்லாம் இயக்குவதற்கு டெக்னிக்கல்-ஆக சில டிஸ்டர்பன்ஸ் இருப்பதாகச் சொன்னார்கள். இருந்தபோதிலும் 2 எக்ஸ்பெரிமெண்டல் வெகிக்கிளைப் பார்த்து, மேலும் 6 ஊர்திகளை அனுபவத்தில் கொண்டுவருவதற்கு ஆவன செய்வதாக சொன்னார்கள். இருந்தபோதிலும், இந்த கஷ்டம் இல்லாமல் இருப்பதற்கு, ஆதிகாலத்தில் 1947-லே டி.வி.எஸ். காரர்கள் வைத்து இருந்ததைப் போல கோல் பிளான்ட்டை வைத்து குறுகிய அளவிலே, தூரம் உள்ள பஸ்களிலே, அந்த பிளான்ட்களை அமைத்தால் டீசல் மிச்சமாகும், செலவும் அதிகமாகாது, பெட்ரோலும் அதிகமாகாது. இந்தமாதிரி கோல் பிளான்ட்களை 20 கிலோமீட்டர், 50 கிலோமீட்டர் செல்லக்கூடிய பேருந்துகளுக்குப் பொருத்தி இயக்க ஏதாவது திட்டங்கள் தயாரிக்கப்பட்டு இருக்கிறதா என்பதைத் தங்கள் வாயிலாக அரசிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டி.வி.எஸ். வேறு, போக்குவரத்துக் கழகங்கள் வேறு, அடிக்கடி மாற்றிக்கொண்டு இருப்பதற்கு அதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இராம. இராமநாதன்.

திரு. இராம. இராமநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் தமிழகத்தின் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய புனித ஆட்சியில் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், இந்தப் பேருந்துகள் எல்லாம் இயற்கை எரி வாயுவைக் கொண்டு இயங்க வேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடு இங்கே வெளிப்படையாகச் சொன்னார்கள். கும்பகோணத்திலே சோழன் போக்குவரத்துக் கழகத்தினுடைய தலைமைப் பிரிவு அலுவலகமும், அதைப்போல 1,2,3, பிரிவு அலுலவகங்களும் இருக்கின்றன. எனவே, இந்த இயற்கை எரி வாயுவைக் கொண்டு ஓடுகின்ற அந்தப் பேருந்துகளை கும்பகோணம் பகுதியிலே ஓட்டுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுமா என்பதை அறிவதோடு, தமிழக

1994 மே 5]

முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுடைய நல்லாட்சியில் பூண்டி மாதா திருக்கோயிலுக்கு பேருந்துகளை சென்னையிலிருந்து விட வேண்டும் என்று கேட்டபோது, அதனை விட்டு இருப்பதற்காக அந்தப் பகுதி மக்கள் சார்பாக என்னுடைய பணிவார்ந்த நன்றிகளை நாங்கள் உங்களிடத்திலே தெரிவித்துக் கொண்டு, கும்பகோணம் பகுதியிலே இதைப் போன்ற எரிவாயுவை வைத்து பேருந்துகளை இயக்குவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதனை தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்தார்கள். அதற்கு என்னுடைய நன்றியை அந்த மக்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினா அவர்கள் கும்பகோணத்திலே அதுபோன்ற எரி வாயுவை வைத்து பேருந்துகளை இயக்க முடியுமா என்று கேட்டு இருக்கிறார்கள். நரிமணத்திற்கு அருகாமையில் இருக்கிற பணிமனையிலேதான் நாங்கள் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். இன்னும் தொலை தூரத்திலேயும் அதைக் கொண்டுவருவதற்கு டிரான்ஸ்போர்ட் வசதிகள் மற்றும் இருக்கின்ற பல்வேறு வசதிகள் தேவைப்படுகிறது. சிலிண்டர் காஸ், மற்றும் அதற்கான டேங்கர்கள் வேண்டி இருக்கின்றது. பல்வேறு நடைமுறைச் சிக்கல்கள் இருக்கின்ற காரணத்தினாலேதான் போக்குவரத்துக் கழகத்திலே ஒன்றன் பின் ஒன்றாக இதை இயக்குவதற்கு எப்படி சாத்தியக் கூறுகள் இருக்கின்றன என்பதை ஆய்ந்ததற்குப் பிறகு உங்களுடைய கோரிக்கை நிறைவேற்றப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; வினா எண் 525, திரு. கா. பூ. முனுசாமி. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

TRUTH ALONE TRIUMPHS

525—

போக்குவரத்துக் கழகப் போராட்டங்களில் கலந்துகொள்ளதோருக்கு பரிசு வழங்குதல்.

*25113—திரு. கா. பூ. முனுசாமி:

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போக்குவரத்துக் கழகங்களில் போராட்டத்தில் ஈடுபடாதவர்களுக்கு மட்டுமே போராட்டத்தில் கலந்து கொள்ளாமைக்கான பரிசு (Strike Free Award) வழங்க அரசு வழிவகை செய்யுமா?